## மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.

## அசல் வழக்கு எண்.283/2020

முன்னிலை – பா.சரவணன், பி.எஸ்ஸி.பி.எல்.,
மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருச்சிராப்பள்ளி.

2025 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 10 ஆம் நாள் செவ்வாய்கிழமை வாதி தரப்பில் முதலாவது சாட்சியின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.நாகராஜ், உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மணிகண்டன் | தந்தை பெயர் | : | குணசேகரன் |
| ஜாதி | : | | கிராமம் | : | |
| வட்டம் | : | | மதம் | : | |
| தொழில் | : | | வயது | : | |

நாள் : 10.06.2025

**P.W. : 1**

**வாதி தரப்பில் முதல் விசாரணை**

நான் வாதி ஆவேன். எனது முதல்விசாரணைக்காக பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதி என்னிடம் 14.07.2019 அன்று ரூ.25 இலட்சம் கடன் பெற்றுக்கொண்டு எழுதிக் கொடுத்த அசல் கடனுறுதிசீட்டு **வாசாஆ.1** ஆகும். 22.10.2020 அன்று நான் வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பின் அலுவலக நகல் **வாசாஆ.2** ஆகும். அதற்கான அஞ்சலக ரசீது **வாசாஆ.,3** ஆகும். அதனைப் பிரதிவாதி பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை **வாசாஆ.4** ஆகும்.

அது தொடர்பாக அஞ்சலக வலைதளத்தில் எடுத்த பதிவேடு நகல் **வாசாஆ.5** ஆகும். 28.10.2020 அன்று பிரதிவாதி அனுப்பிய பதில் அறிவிப்பு **வாசாஆ.6** ஆகும். தாவாப்படி தீர்ப்பாக வேண்டும்.

**(வேண்டுகோளின்படி குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி.
திருச்சிராப்பள்ளி.